பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 05 புதன்கிழமை (21-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 260

# சிவராசன், சுபா மற்றும் சகாக்கள் சயனைட் உட்கொண்டு மரணம்!

## இந்தியப் பொலிஸ் அறிவிப்பு

பெங்களூர், ஆக. 21

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த சிவராசன் மற்றும் சுபா உட்பட ஏழு பேர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர் என்று இந்தியப் பொலிஸார் நேற்று அறிவித்தனர்.

கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூருக்கு அருகே கோல் கொண்டா என்னும் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றினுள் அந்த ஏழுபேரின் சடலங்களும் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்கொலை செய்துகொண்ட ஏழுபேரும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் என்றும் அவர்கள் மேலும் கூறினர்.

இவர்களின் சடலங்கள் பெங்களூர் ஆஸ்பத்திரியில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# ஆனையிறவு படை வாபஸ்?

லண்டன், ஆகஸ்ட் 21

ஸ்ரீலங்கா இராணுவம் ஆனையிறவுப் பகுதியிலிருந்து தனது படைகள் திரும்ப அழைத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்திருப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

எனினும் இச்செய்தியை வேறு செய்தி ஏஜென்ஸிகளோ அல்லது வட்டாரங்களோ நேற்றிரவு வரை ஊர்ஜிதம் செய்யவில்லை.

ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தளங்களை ஸ்ரீலங்கா விமானங்கள் தாக்கி வருகின்றன என்றும்—

ஆயிரக்கணக்கான அரச படையினர் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறார்கள் எனத் தகவல்கள் வந்திருப்பதாகவும் —

என்றாலும் சிறிதளவு படையினர் அங்கு இன்னமும் இருக்கிறாகள் என்று தக

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அம்பாறையில் தமிழர் மீது தொடர்ந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 21

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும், சமூக விரோதக் குழுக்களும் இணைந்து தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

13ஆம் கிராமத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கிரிதரன் (வயது 30) என்ற தமிழ் விவசாயி கடந்த 14ஆம் திகதி வயலுக்குச் செல்லும் வழியில் ஸ்ரீலங்காப் பொலிஸாரினால் வழிமறிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதேபோல் தமக்குக் கப்பம் செலுத்த மறுத்த ஆறுமுகம் [வயது 48] என்ற குடும்பஸ்தரை சமூக விரோதக் குழுவினர் அடித்துக் கொலை செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. [உ-5]

## கடற்படைதளபதி அதிருப்தி? ஓய்வுபெறமுன் நீண்டலீவில்

கொழும்பு, ஆக. 21

ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ ஓய்வு பெறுவதற்கு இரண்டரை மாதங்களுக்கு முன்னரே நீண்ட விடுமுறையில் சேவையில் இருந்து விலகிச் சென்று விட்டதாகத் தெரியவருகிறது.

தமக்கு ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னரே நீண்ட லீவில் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தமக்கு அடுத்த தரத்தில் உள்ள கடற்படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கிய விவகாரத்தில், முறைகேடு நடந்திருப்பதாக கடற்படைத் தளபதி, ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு நேரடியாக முறையிட்டார் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன என்பது தெரிந்ததே.

இதனையடுத்து கடற்படைத் தளபதியின் புகார் குறித்து விசாரிக்க மூன்று பேர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்ததும்—

அந்தக் குழுவின் விசாரணையை அடுத்து பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டதாக தகவல் வெளியிடப்பட்டதும் தெரிந்ததே.

ஆனால் கடற்படைத் தள

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பிரதம நீதியரசராக எச்.டி.தம்பையா நியமனம்

கொழும்பு, ஆக. 21

ஸ்ரீலங்காவின் பிரதம நீதியரசராக திரு. எச். டி. தம்பையா நேற்று ஜனாதிபதி முன்னிலையில் விசுவாசப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டார்.

திரு. பாரிந்தா ரணசிங்க பிரதம நீதியரசர் பதவியில் இருந்து ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து இப்புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளது.

## பிரதமருக்கும் கல்தா!

மாஸ்கோ, ஆக. 21

சோவியத் பிரதம மந்திரி வலன்டைன் பாவ்லோ சுகவீனமுற்றிருப்பதாகவும், வைத்தியர்களின் ஆலோசனைப்படி அவர் படுக்கையில் இருப்பதாகவும் சோவியத் தகவல் தொடர்பு சாதனங்கள் நேற்றிரவு அறிவித்தன.

பிரதமரது கடமைகளை டக்குச்கியோ என்ற பழமைவாதி பொறுப் பேற்றிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

கடும் போர்க்காளரான வலன்டைன், சோவியத்தில் அவசரகாலச் சட்டம் பிரகடனப் படுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தவர்.

புதிய ஜனாதிபதி நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலும் அவர் சமூகமளித்திருக்கவில்லை. (உ-த-5)

## உதவிகள் நிறுத்தம்

அதிபர் கோர்பச்சேவ் பதவி நீக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் அமெரிக்கா உட்பட பல மேற்கு நாடுகளும் ஜப்பானும் சோவியத்துக்கான தங்களது பொருளாதார உதவிகளை நிறுத்தி விட்டதாக அறிவித்திருக்கின்றன.

# மாஸ்கோவில் பதற்ற நிலை!

லண்டன். ஆகஸ்ட் 21

சோவியத் அதிபர் பதவியிலிருந்து திரு. கோர்ப்பச்சேவ் திடீர்ப் புரட்சி ஒன்றின் மூலம் நீக்கப்பட்டதை அடுத்து தலைநகர் மாஸ்கோவில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டிருக்கிறது அங்கு ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் மாஸ்கோவிலும் லெனின் கிராட்டிலும் பல லட்சம் மக்கள் ஒன்று கூடி புதிய ஆட்சியாளர்களுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தி வருவதாகவும்—

புதிய ஆட்சியாளர்களின் அவசர அழைப்பை அடுத்து, மக்களைக் கட்டுப்படுத்தி, சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக நூற்றுக்கணக்கான இராணுவ டாங்கிகள் தலைநகரை நோக்கி அணி வகுத்து விரைந்து கொண்டிருப்பதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கோர்பச்சேவுடன் பேச புஷ் எடுத்த முயற்சி தோல்வி

வாஷிங்டன், ஆக. 21

பதவியிழந்த ஜனாதிபதி கோர்பச்சேவுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளத் தாம் இருமுறை முயற்சித்ததாகவும் அவை பலனளிக்கவில்லை என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்றுத் தெரிவித்தார்.

ரஷ்ய மாநிலக் குடியரசின் ஜனாதிபதி பொரிஸ் யெல்ஸினுடன் நேற்று தான் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசியதாகவும் அவர் கூறினார்.

கோர்பச்சேவை மீண்டும் பதவியில் அமர்த்த அவர் எடுக்கும் முயற்சிகளுக்குத் தமது பூரண ஆதரவு இருக்கும் என்று தாம் திரு. யெல்சினுக்கு உறுதியளித்ததாகவும் திரு. புஷ் சொன்னார்.

மக்களால் தெரிவு செய்யப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சிகிச்சையின் பின் மீண்டும் கோர்பி பணிக்கு வருவார்!

### புதிய ஜனாதிபதி கூறுகிறார்

மாஸ்கோ, ஆக. 21

பதவியிழந்த திரு. கோர்பச்சேவ் சுகமாக இருக்கிறார். சிகிச்சை முடிந்த பின்னர் மீண்டும் பணிபுரிய அவர் வருவார் என்று எதிர்பார்க்கிறோம்.

சோவியத் யூனியனின் புதிய ஜனாதிபதி ஜெனாடி யனயேவ் தாம் நேற்று நடத்திய முதலாவது செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

கோர்பச்சேவ் அறிமுகம் செய்து வைத்த ஜனநாயக சீர்திருத்தம், சந்தைப் படுத்தும் பொருளாதாரம் ஆகிய கொள்கைகளைத் தொடர்ந்து அமுல் நடத்த புதிய ஆட்சி உறுதிபூண்டுள்ளது என்றும் திரு. யனயேவ் சொன்னார்.

ஜேர்மன் பிரதமர் ஹெல்மட்கோலுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில், கோர்பச்சேவ் உயிருடன் பாதுகாப்பாக இருக்கிறார் என்று சோவியத் புதிய ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் பதவி

[3 ஆம் பக்கம் பார்க்க]

# தளபதி தெரிவுச் சிக்கலை பிரேமா சமாளித்த 'விதம்'!

கொழும்பு, ஆக. 21

புதிய இராணுவத் தளபதி ஒருவரை நியமிக்காமல் லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் பதவிக் காலத்தை மூன்று மாதங்களுக்கு [illegible] நீடிக்க அரசு முடிவு [illegible] ஏன்?

இது தொடர்பாக ''உள் வீட்டு'' இரகசியங்கள் இப்போது வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தமது பதவிக்காலத்தை ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல் மேலும் ஒரு வருட [illegible] கோரியிருந்தார்.

அரசு விரும்பியிருந்தால் அவருக்கு ஒரு வருட சேவை நீடிப்பை வழங்கியிருக்கலாம்; அல்லது அவருக்குப் பதிலாக புதிய தளபதி ஒருவரை நியமித்திருக்கலாம்.

ஆனால் இந்த வழிவகைகளில் ஏதனை நாடினாலும் இராணுவத்துக்குள் பிளவு ஏற்படும் என்று ஜனாதி

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு ஆங்கில ஒலி வெட்டி, புதிய தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (17847)

### தேவை

Sony ICF - SW 1 பொக்கற் றேடியோ உடன் தேவை. விலை விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விமலாஸ், நவீன சந்தை, சாவகச்சேரி. (17848)

ஆண்களுக்குரிய ஆடைகள் வெட்டி (Cutters) தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்தவர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். நியூவே றெக்கோடிங் சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம். [17486]

A/L மாணவிக்கு பௌதிகவியல், இரசாயனவியல் வீட்டிற்கு வந்து கற்பிக்க ஆசிரியர் தேவை. தொடர்பு: வி. நடராஜா, சட்டத்தரணி, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம் (4249)

பாவனைப் பொருள்கள் சிலவற்றின் உற்பத்தி பற்றிய தேர்ச்சியுடைய, லண்டன் இன்ரர் தராதரமுடைய யாழ். நகர வாசி ஒருவர் முழுநேர/பகுதிநேர வேலையை எதிர்பார்க்கிறார். தொடர்பு: இல. 343, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17850)

### மணமகள் தேவை

யாழ். இந்து, 32 வயது சுவிட்ஸர்லாந்தில் தொழில் பார்க்கும், மிருகசீரிடம் 3ஆம் பாதம், 8இல் செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு மணப்பெண் தேவை. தொடர்பு கொள்ளவும்: V. நந்தகோபால், தபாற்கந்தோர் வீதி, பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி. (17845)

### வைத்திய சேவை

Dr. அல்போன்ஸ் அத்தனாசியார் பண்டத்தரிப்பில் 18-08-91 தொடக்கம் திரும்பவும் தமது வைத்திய சேவையை ஆரம்பித்திருக்கின்றார். (17656)

### ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

(ஓ-0290)

### புத்தக விற்பனை

1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற சாகித்திய விழாவில் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்ட ஈழைத் தேசியக் கல்விச் சிந்தனைகள் என். கே. தர்மலிங்கம் M.A. எழுதியது. உயர் நிலைப் பட்டப் படிப்பு, பல்கலைக் கழகம் இவற்றிற்கு அமைவானது. சொற்ப பிரதிகள் உண்டு. கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா, சோபனா புத்தகசாலைகள். (17846)

# பிறந்த தின வாழ்த்து



★ செல்வி ஷாகீர்த்தியா ★

21 — 08 — 1991

ஸ்ரீஜெயசிங்கம் - ரஞ்சிதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி ஷாகீர்த்தியா இன்று தனது முதலாவது பிறந்த நாளை கரணவாயிலுள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை கனடாவிலுள்ள அப்பா, அம்மா, அண்ணா கபில், அம்மம்மாமார், தாத்தாமார், அப்பம்மா, பூட்டி, பெரியப்பா (ஜேர்மன்), பெரியப்பா குடும்பம், சுவிஸ் சித்தி, சித்தப்பா (சுவிஸ்), மாமாமார், மாமிமார், மாலிச் சித்தி, சுபா சித்தி, மட்டக்களப்பு தாத்தா குடும்பம், மலேசியா அம்மம்மா குடும்பம், நவக்கிரியிலுள்ள உறவினர்கள், அச்சுவேலியிலுள்ள உறவினர்கள், கரணவாயிலுள்ள உறவினர்கள், வேதாரணியேஸ்வர வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சகல செல்வமும் பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

கோணந்தோட்டம்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி. [17655]

# சப்பற வெள்ளோட்டம்

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் எதிர்வரும் 22-08-1991 வியாழக்கிழமை காலை 8-15 மணிக்கு சப்பற வெள்ளோட்டம் நடைபெறும். அடியார்களைக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்:
ஆலய தர்மகர்த்தா சபையினர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (4253)

# வட மாகாண புற்றுநோய்ச் சங்கம்

மேற்படி சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் சாயிராம் கிளினிக், 410, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 25-8-91 காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது. சங்கத்தின் எதிர்காலம் பற்றிய முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டி உள்ளதால், அனைத்து நிர்வாகசபை அங்கத்தவர்களும் தவறாது சமுகம் அளிக்குமாறு அன்புடன் கேட்கப்படுகின்றீர்கள்.

-கௌரவ செயலாளர்.

[17852]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்: 26 — 02 — 1976



வீர மரணம்: 22 — 07 — 1991

## கணேசநாதன் ஜனார்த்தனன்
(மணிவாசகன்)

மண் மீட்க முன்னின்ற மாவீரன் எங்கள் ஜனா!
விண்ணுற்ற வீரப்போர் வேங்கையிவன்-எண்ணத்தில்
ஏற்றம் இலங்கிடவே எங்களது சிந்தைகளில்
ஊற்றாகி நிற்பான் உயர்ந்து.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர், உற்றார், உறவினர்கள்.

''கௌரி வாசம்'',
காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு. [17858]

# 31 ஆவது நினைவு தினம்

மண்ணின் மைந்தனாய்: 19 — 08 — 1973



மாவீரனாய்: 22 — 07 — 1991

## மகாலிங்கம் சதீஸ்வரன்
(வீரவேங்கை - சிவமூர்த்தி)

தாயக மீட்புக்காய் எதிரிப்படையோடு கட்டைக்காட்டில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணத்தை தழுவிக் கொண்ட மண்ணின் மைந்தன் சிவமூர்த்திக்கும், அவருடன் வீரமரணம் அடைந்த சக போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அந்தியேட்டிக்கிரியை 21 - 08 - 1991 புதன்கிழமை (இன்று) காலை 6-00 மணிக்கு புங்குடுதீவு கண்ணகை அம்மன் கடற்கரை மடத்திலும், வீட்டுக்கிரியைகள் இன்று பகல் 11-00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய நடைபெறும் இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை, தாய், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (4250)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ் | கதிர்காமத்தம்பி இராதாகிருஷ்ணன் | நாகமணி தில்லைநாதன் |
|---|---|---|
| பாரினில் உதிப்பு: 14 — 01 — 1958 | பாரினில் உதிப்பு: 22 — 03 — 1962 | பாரினில் உதிப்பு: 30 — 03 — 1959 |

பாரதத்தான் அழிப்பு: 21 — 08 — 1989

திதி: 30 — 08 — 1991

அண்ணல்கள் மூவர்மாய்ந்து ஆண்டுகள் இரண்டானாலும் - உங்கள்
எண்ணங்கள் எள்ளளவும் எம்மனதால் நீங்கவில்லை
ஒருமரத்துப் பறவைகளாய் இணைந்திருந்து பறந்தீர்கள் - உங்கள்
பெருமைகள் பேசிப்பேசிப் பொழுதினைக் கழிக்கின்றோமே.

என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
- குடும்பத்தினர்.

வர்த்தனை, புலோலி மேற்கு, [17827]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சோவியத்தில் ஆட்சிக் கவிழ்ப்பு

சோவியத் யூனியனில் திடீர்ப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவ் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் உப ஜனாதிபதி கினாடியன்யேவ் தலைமையில் கடும் போக்காளர்களைக் கொண்ட புதிய ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது.

1917ஆம் ஆண்டு சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் புரட்சி ஏற்பட்ட பின்னர் எத்தனையோ ஆட்சி மாற்றங்கள், பதவிக் கவிழ்ப்புகள் இடம் பெற்று விட்டன.

ஆனால் தற்போது இடம் பெற்றுள்ள ஆட்சிக் கவிழ்ப்பு சோவியத் யூனியனுக்குள்ளும் வெளி நாடுகளிலும் முன் எப்போதும் இல்லாதவாறு பெரும் சலசலப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

சோவியத் தலைவர் ஒருவர் கவிழ்க்கப்பட்டதற்கு எதிராக முதல் தடவையாக மாஸ்கோவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

தமது சுதந்திரம் நசுக்கப்படலாம் என்ற அச்சத்தினால் சோவியத் மாநிலக் குடியரசுகளில் பதற்றநிலை உருவாகி வருகிறது. அமெரிக்கா, பிரிட்டன் உட்பட உலக நாடுகள் ஆட்சிக் கவிழ்ப்பைக் கண்டித்துள்ளன. லிபியா தவிர வேறு எந்த ஒரு நாடும் புதிய ஆட்சியாளர்களை இதுவரை ஆதரிக்க முன்வரவில்லை.

1985ஆம் ஆண்டு சோவியத் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கோர்பச்சேவ், சோவியத் யூனியனுக்குள்ளும் வெளிநாடுகளிலும் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களின் கதாநாயகனாக கருதப்படுவதே இவற்றுக்கெல்லாம் காரணம் என்று சொல்லலாம்.

1964ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட நிகிட்டா குருஷேவ் ஆரம்பித்த அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களை,20 வருட கால பிரஷ்னேவின் ஆட்சி இடைவெளியின் பின், 1985 முதல் மீண்டும் தொடர்ந்தவர் கோர்பச்சேவ்.

''பெரெஸ் ரொய்கா'' எனப்படும் அரசியல் பொருளாதார சீர்திருத்தங்கள், ''கிளாஸ் நொட்'' என்ற திறந்த கொள்கை ஆகியவற்றைப் பிரகடனம் செய்து இந்த அரசியல் மாற்றங்களுக்கு இவர் வழி வகுத்திருந்தார். ஆனால் கம்யூனிஸ அமைப்பு பலவீனம் அடைய இவை காரணமாகின என்பதே இவர் மீதான பிரதான குற்றச்சாட்டு.

சர்வதேச அரங்கைப் பொறுத்தவரை கம்போடிய, ஆப்கானிஸ்தான், அங்கோலா, நிக்கரகுவா பிரச்சினைகளில் சமாதான ஒப்பந்தங்கள் உருவாகவும்; செக்கோஸ்லோவேக்கியா, ருமேனியா, போலந்து, ஹங்கேரி போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் ஏற்படவும் கோர்பச்சேவ்வின் கொள்கைகள் வழி வகுத்தன. வளைகுடா யுத்தத்தில் அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகளுக்கு கோர்பச்சேவ் வழங்கிய ஆதரவு அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் கையை மேலும் பலப்படுத்தியது.

அமெரிக்காவும் சோவியத் யூனியனும் எதிர்வரும் அக்டோபர் மாதம் மத்திய கிழக்குத் தொடர்பான சமாதான மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த சமயம் இந்த பதவிக் கவிழ்ப்பு இடம் பெற்றிருக்கிறது.

பதவிக் கவிழ்ப்பு அமெரிக்க — சோவியத் ஆயுதக் குறைப்புத் திட்டங்களையும் மற்றும் கிழக்கு — மேற்கு நல்லுறவுகளையும்கேள்விக்குரியதாக்கி விட்டது.

## டயஸ் கந்தசாமி நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 21

முன்னாள் யாழ், அம்பாறை மாவட்டங்களின் அரசியற் பொறுப்பாளரான மேஜர் டயஸ் கந்தசாமியின் (ம. தவராசா - ஈச்சமோட்டை) 2 ஆவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு திருநெல்வேலி டயஸ் வீதியில் உள்ள வைரவர் கோயிலடியில் நடைபெறும். [உ]

## ஆச்சிரம ஆண்டு விழா

மருதனார்மடம் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் ஆண்டு விழா இன்று புதன் காலை 6-30 மணிக்கு பரிசுத்த நற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகிறது. பிற்பகல் 3-00 மணிக்கு பகிரங்கக் கூட்டம் நடைபெறும். [இ]

## கிரிக்கெட்

டொனால்ட் கின்ன மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (இ)

## கடற்படை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பதி உண்மையில் இந்த விசாரணை குறித்து திருப்தி அடைந்தாரா என்பது தெரியவரவில்லை.

இந்நிலையில் நவம்பர் முதலாம் திகதி ஓய்வு பெற்றுச் செல்லவேண்டிய கடற்படைத் தளபதி, அதற்கு முன்னரே நீண்ட லீவில் வீடு சென்று விட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று—

ஸ்ரீலங்கா விமானப்படையிலும் ஏயர் கொமடோர் ஆனந்த சமரக்கோன் தலைமையிலான தொழில் நுட்பப் பிரிவுக்கும், விமானப்படை பைலட்டுக்ளுக்கும் இடையில் 'லடாய்' ஏற்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தங்களது விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் போன்றவற்றின் தொழில்நுட்பத் தரத்தை சரியாகப் பேணுவதில் தொழில்நுட்பப் பிரிவு தவறி வருவதாக பைலட்டுகள் தரப்பில் குற்றஞ் சுமத்தப்பட்டு வருகிறது.

''விமானப்படையின் தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர், தனது பகுதியை ஒழுங்கு படுத்துவதை சரியாகச் செய்யவில்லை. ஆனால் அதற்கிடையில் அவருக்கு தனது வேலைக்கு மேலதிகமாக, சுயாதீன தொலைக்காட்சி சேவையிலும் (ஐ. ரி. என்.) கொழும்பில் விரைவில் நடைபெறவிருக்கும் தெற்காசிய விளையாட்டுப் போட்டி சம்பந்தமான பிரசாரத்திலும் ஈடுபடுவதற்கு பணி ஒதுக்கப்பட்டிருக்கிறது'' என கொழும்புப் பத்திரிகைகள் குற்றம் சுமத்தியுள்ளன. (உ)

## பாடசாலைகளின் தேவை பற்றி ஆராயும் கூட்டம்

### கோட்ட மட்டத்தில் நாளை முதல்

யாழ்ப்பாணம், ஆக. 21

பாடசாலைகளின் உடனடித் தேவைகள் பற்றியும், அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வதற்காக கோட்ட மட்டத்தில் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

மருதனார்மடம் கோட்டத்துக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோட்ட அலுவலகத்திலும் —

தென்மராட்சி கோட்டத்துக்கான கூட்டம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் —

வடமராட்சி கோட்டத்துக்கான கூட்டம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள், பொருளாளர்கள், அதிபர்கள் ஆகியோர் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். [இ-3]

## சிகிச்சை..:

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முந்த ஜனாதிபதி கோர்பச்சேவ் கருங்கடல் அருகே உள்ள கிரிமியா நகரில் இருந்து விமானம் ஒன்றில் புறப்பட்டுச் சென்றார் என்றும்—

அவர் விமானத்தில் ஏறியதை பார்த்தவர்களின் தகவல்படி அவர் நல்ல உடல் நிலையில் காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் எங்கு கொண்டுசெல்லப்பட்டார் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

இ-எ)

## கோர்பச்சேவ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட ஒரே ஜனாதிபதியான திரு. யெல்சினுக்கு மேற்கு நாடுகளின் ஆதரவு பூரணமாக இருக்கும் என்று யெல்சினிடம் தாம் கூறியதாகவும் திரு. புஷ் மேலும் தெரிவித்தார். (உ-எ)

## ஆனையிறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வல்கள் கூறுவதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

இதேவேளை—

ஆனையிறவுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நடமாடுவது பற்றிய விவரமான ஒளிபரப்பு ஒன்று ரூபவாஹினியின் மூன்று செய்திகளிலும் நேற்று இடம்பெற்றது.

ஆனையிறவு இராணுவ முகாம் மேலும் பலப்படுத்தப்பட்டு இராணுவ நிலைகள் விஸ்தரிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ரூபவாஹினி மேலும் தெரிவித்தது.

(உ-த-5)

## சிவராசன்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளன.

சிவராஜன், சுபா, சுரேஷ், மாஸ்டர், அம்மான் எனப்படும் நேரு, ரங்கன் ஆகியோரின் சடலங்களே அடையாளம் காணப்பட்டன. மற்றொரு சடலம் அடையாளம் காணப்படவில்லை.

சம்பவம் நடந்த வீட்டில் இலங்கைப் போராளிகள் தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவ்வீட்டை பொலீஸார் முற்றுகையிட்டு கண்காணித்து வந்தனர் என்றும்—

கடந்த திங்கட்கிழமை மாலை தொடக்கம் அவ்வீட்டினுள் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும்—

அதில் ஒரு சப் இன்ஸ்பெக்டரும், ஒரு கான்ஸ்டபிளும் காயமடைந்தனர் என்றும்—

திங்கள் நள்ளிரவுடன் சுடுவது நின்று விட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

### கொமாண்டோக்கள் நுழைந்தனர்

நேற்று அதிகாலை புதுடில்லியில் இருந்து விசேடமாக பெங்களூர் சென்ற 5 பேர் கொண்ட பரா இராணுவ கொமாண்டோக் குழு, அந்த வீட்டின் பின் கதவை பிளாஸ்டிக் குண்டு வைத்துத் தகர்த்து உள்ளே சென்றது.

அப்போது வீட்டினுள் இருந்த ஏழு பேரும் இறந்து கிடந்ததைக் கொமாண்டோக்கள் கண்டனராம்.

அந்த வீட்டினுள் இருந்து வீடியோ மற்றும் ஓடியோ கசெட்டுகள், ஏ. கே 47 துப்பாக்கி ஒன்று, கைத்துப்பாக்கி ஒன்று மற்றும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து மற்றும் ஆபரண வகைகள் கைப்பற்றப்பட்டன.

### தனக்குத் தானே சூடு

சிவராசன் தனது தலையில் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்றும்—

ஏனைய ஆறு பேரும் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர் என்றும் இந்திய வானொலி தெரிவித்தது.

கடந்த 16 ஆம் திகதியே சிவராசனும் சுபாவும் பெங்களூர் சென்று ஒரு தம்பதியரின் உதவியுடன் அங்கு ஒரு வீட்டில் தங்கியிருந்தனர் என்றும்—

அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த ஒரு பெண்ணின் தொலைபேசிப் பேச்சைத் தொடர்ந்தே சிவராசன் தங்கியிருந்த விடயம் பொலீஸாருக்குத் தெரியவந்தது என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

ஆனால் — சயனைட் உட்கொண்ட நிலையில் பொலீஸாரிடம் பிடிபட்ட வேறு ஏழு பேர் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே சிவராசன் ஒளித்திருந்த வீடு கண்டுபிடிக்கப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

விசேட புலனாய்வுக் குழுத் தலைவர் டி. ஆர். கார்த்திகேயனும், இந்திய மத்திய புலனாய்வுத்துறை தலைவர் விஜய்கரனும் தற்போது பெங்களூரில் தங்கியிருந்து மேல் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்

கடந்த 3 வாரங்களில் கர்நாடக மாநிலத்தில் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் எண்ணிக்கை 22 என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

## தளபதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பதிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாயும் —

அதனையடுத்தே ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுக்கு மூன்று மாதகால பதவி நீடிப்பு மட்டுமே இப்போதைக்கு வழங்குவதுஎன்று ஜனாதிபதி பிரேமதாசா 'புத்திசாதுரியமாக' முடிவு செய்தார் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### கடும் போட்டி

ஹமில்டன் வனசிங்க ஓய்வு பெற்றால் புதிய தளபதியாகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்களின் பட்டியலில், மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ இருவரினதும் பெயர்களே முன்னணியில் இருந்தன. இருவருமே தளபதித் தெரிவுக்கு போட்டி போட்டுக் கொண்டிருந்தனர்.

### வைத்தியரத்னவுக்கு சேவை மூப்புத்தகுதி

இவர்களில் சிசில் வைத்தியரத்ன சேவை மூப்புத் தகுதி பெற்றவர். அவர் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதியுடன் மேஜர் ஜெனரல் பட்டம் பெற்று மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்கிறார்.

அரசாங்கத்தின் முன்னைய தீர்மானத்தின்படி மேஜர் ஜெனரல் தரத்தில் உள்ள அதிகாரி ஆகக்கூடியது மூன்று வருடங்கள் மட்டுமே அப்பதவியில் கடமையாற்ற முடியும்.

எனவே —

மேஜர் ஜெனரல் வைத்தியரத்னாவுக்கு டிசம்பர் முதலாம் திகதிக்கு முன்னர், பதவியுயர்வு வழங்கி அவரது சேவையை உறுதிப்படுத்தாவிடில் அவரின் நிலை சிக்கலாகிவிடும்.

இந்நிலையில் —

தற்போதுள்ள தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க டிசம்பர் முதலாம் திகதிக்குப் பின்னரும் இராணுவத் தளபதியாக பதவியில் இருக்கக் கூடியதாக அவருக்கு இப்போதே சேவை நீடிப்பு வழங்கினால் —

அது மேஜர் ஜெனரல் வைத்தியரத்னவுக்கு டிசம்பர் முதலாம் திகதி அளவில் பதவி உயர்வுவழங்க முடியாத நிலையை ஏற்படுத்தும் என்றும் —

அதனால் வைத்தியரத்னாவின் இராணுவ சேவை பற்றிய சந்தேக நிலை இப்போதே உறுதிப்படுத்தப்பட்டுவிட்டதான நிலை உருவாகிவிடும் என்றும் —

இதனால் இராணுவத் தலைமைப்பீடத்துக்குள் சர்ச்சைகள், பிளவுகள் ஏற்பட அது வழிசெய்து விடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

### நவம்பர் வரை நீடிப்பு

இதனால் தற்போதைக்கு தளபதி ஹமில்டன் வனசிங்காவின் பதவிக் காலத்தை அரசு நவம்பர் நடுப்பகுதி வரை மட்டுமே நீடித்திருக்கிறது.

இதன் மூலம் —

★ சேவையை நீடித்து தளபதி ஹமில்டன் வனசிங்காவை அரசு திருப்திப்படுத்தியது.

★ நவம்பர் 15 ஆம் திகதிக்குப் பின்னர் டிசம்பர் முதலாம் திகதிக்குள் தனக்கு பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புகள் உண்டு என்ற நம்பிக்கை மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரதனாவுக்கு ஊட்டப்பட்டிருக்கிறது.

★ புதிய தளபதி தேர்வுப் பிரச்சினையை மூன்று மாத காலம் மட்டும் தள்ளிப் போட்டிருப்பதால், அதுவரைப் பொறுத்திருப்போம் என்ற மனநிலைக்கு மேஜர் டென்ஸில் கெப்பேகடுவ தள்ளப்பட்டு விட்டார்.

— இப்படி மூன்று பகுதியையும் சமாளிக்கும் விதத்தில் அரசு பிரச்சினையை மூன்று மாதங்களுக்குத் தள்ளிப் போட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.



## இன்பந்தரும் சரவணனே!

பல்லவி

அருள் புரிவாய் முருகனே - பக்தர்
இருள் களைவாய் மாயோன் மருகனே
(அருள்)

அனுபல்லவி

தலம் வந்துனை தொழுகின்றோம் உலகை
வலம் வந்தவேலனே ஆறுமுகனே
(அருள்)

சரணம்

நல்லைநகர் குடிகொண்ட நாயகனே
தொல்லைகள் போக்கிடும் தூயவனே
தில்லையில் நடனமிடும் நடராசன் பாலனே
எல்லையிலா இன்பந்தரும் சரவணனே!
(அருள்)

— அல்வாயூர் சிவகணேஷன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றோம்!

மகிழ்ச்சிகரமான ஆரம்பம்

## 22-8-1991 வியாழக்கிழமை

முற்பகல் 11-35 மணிக்கு

யாழ்ப்பாணம் ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின்

# ★ "யாழமுதம்" ★

## உழைப்போர் உணவகம்

291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சுத்தம், சுவை, தரம் நிறைந்த
தித்திக்கும் தீன் பண்டங்கள், தேனீர், பால்,
குளிர்பானம்

உங்களது அன்பான வரவை எதிர்பார்க்கிறோம்.
நன்றி - வணக்கம்

மு. சிவப்பிரகாசம், பொதுமுகாமையாளர்.
சொலமன். சூ. சிறில் தலைவர்.

[யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வரையுள்ளது]

[சி/0370]


## யாழ்ப்பாண மாநகரசபை

# அறிவித்தல்

### நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாக்கால தற்காலிக சந்தைக் கடைகள்

கீழ்வரும் கடைகள் 23 - 08 - 1991 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படுவதன் மூலம் குத்தகைக்கு கொடுபடவுள்ளன. ஏலத்தில் சித்தி பெற்றவர்கள் உடன் குத்தகைத் தொகையினைச் செலுத்தி இடத்தினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

| | இந்து விடுதிக்கு அருகாமை | பண்டார மாளிகை வளவு |
|---|---|---|
| 1. மணிகாப்புக் கடைகள் | 01 | 13 |
| 2. கச்சான் கடலைக் கடைகள் | 22 | 10 |
| 3. இனிப்புக் கடைகள் | 07 | 11 |
| 4. ஐஸ்கிறீம் வாகன நிலையங்கள் | 12 | 04 |
| 5. இதர கடைகள் | 18 | ... |

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
19 - 08 - 1991.

(சி-0375)


# A/L 92 புதிய பிரிவுகள்

## சனி - ஞாயிறு வகுப்புகள்

தாவரவியல்:
திரு. ஐங்கரநேசன்

இரசாயனவியல்:
திரு. செல்வா

விலங்கியல்:
திரு. நாகநாதன்

பௌதிகவியல்:
திரு. வர்ணம்

தூய/பிரயோக கணிதம்:
திரு. சந்திரமோகன்

| நேரம் | பாடம் | அலகு |
|---|---|---|
| காலை | | |
| 6 — 7 | தாவரவியல் | உடற்றொழிலியல் |
| 7 — 8 | தாவரவியல் | புதிய உடல் அமைப்பும், இனப்பெருக்கமும் |
| பிற்பகல் | | |
| 2-30 — 3-30 | பௌதிகவியல் | மின்னியல் |
| 3-30 — 4-30 | இரசாயனவியல் | அசேதன இரசாயனம் |
| 4-30 — 5-30 | தாவரவியல் பிரயோககணிதம் | உடலமைப்பியல் |
| 5-30 — 6-30 | விலங்கியல் தூயகணிதம் | முளையவியல் |

★ குறித்த எண்ணிக்கையானவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படுமாதலால் 23-08-1991 இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

## ஆரம்பம்: 25 - 08 - 1991

# யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

[சி-0376]


## பெரும் பின்னடைவு

மணிலா, ஆக. 21

சிவராசன் மற்றும் சுபா தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்படுவது ராஜீவ் கொலை தொடர்பான விசாரணையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் உயிரோடு பிடிக்கப்பட்டிருந்தால், ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்ட உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் பற்றிய தகவல்கள் வெளிவந்திருக்கும் என ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## மூவர் சரண்

சென்னை, ஆக. 21

தராசு வார இதழ் அலுவலகத்தின் மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் மூவர் பொலீஸாரிடம் சரணடைந்தனர்.

அவர்களை இம்மாதம் 30 ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படி சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை — ஏற்கனவே கைதான முன்னாள் மாநில உள்துறைச் செயலாளர் நாகராஜனை பிணையில் விடுவிக்கக் கோரும் ஒரு மனுவை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. இன்னொரு மனு விசாரணையில் உள்ளது. [இ-எ]

## ஏற்க மறுப்பு

கொழும்பு, ஆக. 21

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றையும் மக்கள் மயப்படுத்த வேண்டும் என்ற உலகவங்கியின் கோரிக்கையை ஏற்க இலங்கை அரசு மறுத்துவிட்டது.

இத்தகவலை 'சண்டே ரைம்ஸ்' [19-08-1991] வெளியிட்டிருக்கிறது.

## மாஸ்கோவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்தன.

புதிய ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி வெடிக்கும் அபாயம் தோன்றியிருப்பதாகவும் —

அத்தகைய நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படக்கூடிய இராணுவ நடவடிக்கைகள் சோவியத்தில் இரத்த ஆறு ஓட வழிவகுக்கக் கூடும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

# சரணடையக் கோரியபோது வேட்டு பதிலாகக் கிடைத்தது!

புதுடில்லி, ஆக. 21

சிவராசன் தங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்ட பொலீஸார், சிவராசனைச் சரணடையும் படி வெளியில் இருந்தபடி கேட்டுக் கொண்டனர் என்றும்—

அக்கோரிக்கைக்குப் பதிலாக அவ்வீட்டினுள் இருந்து பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டதாகவும் நெதர்லாந்து வானொலியின் புதுடில்லிச் செய்தியாளர் அஜோய்போஸ் தெரிவித்தார்.

அதன் பின்னர் இரவு முழுவதும் புதுடில்லியில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் முக்கிய மாநாடு ஒன்றை நடத்தியதாகவும்—

அதனைத் தொடர்ந்தே சிவராசன் தங்கியிருந்த வீட்டின் பின் கதவு நேற்றுக் காலை உடைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அச்சமயம்—

சிவராசன் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி சுமார் 2 ஆயிரம் பொலீஸாரும் மற்றும் உளவுப்படையினரும் முற்றுகையிட்டிருந்தனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [உ-எ]

# கோர்பியைச் சந்திக்க யெல்சின் 'விடாப்பிடி'!

மாஸ்கோ, ஆக. 21

இன்னும் 24 மணி நேரத்தில் திரு. கோர்பச்சேவைச் சந்திக்க ஒழுங்கு செய்து தரும்படி சோவியத் புதிய ஜனாதிபதியை ரஷ்ய மாநிலக் குடியரசின் ஜனாதிபதி பொரிஸ்யெல்சின் கோரியிருக்கிறார்.

வெளிநாட்டு வைத்திய நிபுணர்கள் குழுவைக் கொண்டு திரு. கோர்பச்சேவின் உடல் நிலையைச் சோதிக்க வேண்டும் என்றும் திரு. யெல்சின் சோவியத் ஆட்சியாளரைக் கேட்டிருக்கிறார்.

இதற்கிடையில்—

நேற்று மாஸ்கோ விமான நிலையத்தில் தரையிறங்கிய இரண்டு விசேட விமானங்களில் ஒன்றில் பதவியிழந்த ஜனாதிபதி கோர்பச்சேவ் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று மாஸ்கோவில் இருந்து வெளியான செய்தி ஒன்று தெரிவித்தது.

# மரண அறிவித்தல்கள்

## சி. தம்பிப்பிள்ளை

குரும்பசிட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. சி. தம்பிப்பிள்ளை அவர்கள் 20-8-91 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார். இவர் பார்வதம்மாவின் அன்புக் கணவரும் காலம் சென்ற சாரதாதேவி, பங்கஜதேவி, அம்பிகைதேவி, நடராஜமூர்த்தி, சிவராமமூர்த்தி ஆகியோரின் தந்தையும் சிதம்பரநாதன், காலம்சென்ற சாந்தராஜா, ராமச்சந்திரன், பாலசௌந்தரி, கிரிதரி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20 - 8 - 91 செவ்வாய்க்கிழமையன்று தெல்லிப்பழையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

திருமதி. ப. தம்பிப்பிள்ளை

துர்க்கையம்மன் கோவிலடி,
தெல்லிப்பளை.

(17661)

## க. கணேசபிள்ளை

திரு. கணேசபிள்ளை [ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி] கடந்த திங்கட்கிழமை 19-8-91 அன்று காலமாகிவிட்டார். மரணச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

460, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்

[4255]

## திரு. வேலுப்பிள்ளை நடராசா

அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலய பரிபாலகர் ஆகிய திரு. வேலுப்பிள்ளை நடராசா 20-8-91 நேற்று இரவு 9. 30 மணியளவில் காலமானார்.

இவர் காலம்சென்ற வேலுப்பிள்ளை மாணிக்கம் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரை அவர்களின் அன்புச் சகோதரரும் ஐ. வரதராஜா, (செயலகம், யாழ்ப்பாணம்), ஐ. ஜீவதாசன் (தொல்பொருள் திணைக்களம்), ஐ. வாணிதாசன் (ஜேர்மனி), ஐ.முருகதாசன்(தபால் திணைக்களம்,யாழ்.),ஐ.குமாரதாசன் (கனகரத்தினம் ம. ம. வித்தியாலய நூலகர்) காலஞ்சென்ற ஐ. குகதாசன், திருமதி சி. ஜெயபாரதி, திருமதி ம. அபிராமி ஆகியோரின் பெரிய தந்தையார் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 21-08-91 (இன்று) பி. ப. 4 மணியளவில் 49 கலைமகள் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

(17663)

தகவல்:
ஐ. வரதராஜா

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org